# மத்தேயு

எழுதின

சுவிசேஷம்.

---

# MATTHEW'S GOSPEL.

YALE MISSIONARY LIBRARY DIVINITY SCHOOL
3296

FOR THE JAFFNA BIBLE SOCIETY.

MADRAS:
PRINTED AT THE AMERICAN MISSION PRESS.
1863.

# மத்தேயு எழுதின

## சுவிசேஷம்.

## ௧. அதிகாரம்.

௧. கிறிஸ்துவின் வமிச வரலாறு: ௰௮. அவர் ஜென்ம விவரம்.

௧. ஆபிரகாமின் சந்ததியான தாவீதின் சந்ததியாகிய யேசுக்கிறிஸ்துவின் வமிச வரலாறு.

௨. ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்;

௩. யூதா தாமாரிடத்தில் பேரேசையுஞ் செரக்கையும் பெற்றான்; பேரேஸ் எத்சரோனைப் பெற்றான்;

௪. எத்சரோன் ராமைப் பெற்றான்; ராம் அம்மினதாபைப் பெற்றான்; அம்மினதாபு நாக்ஷோனைப் பெற்றான்;

௫. நாக்ஷோன் சல்மோனைப் பெற்றான்; சல்மோன் இராகாப்பினிடத்தில் போவசைப் பெற்றான்; போவஸ் ரூத்தினிடத்தில் ஓபேத்தைப் பெற்றான்; ஓபேத் ஈஷாயைப் பெற்றான்;

௬. ஈஷாய் இராசனாகிய தாவீதைப் பெற்றான்; இராசனாகிய தாவீது ஊரியாவின் மனைவியிடத்தில் சலோமோனைப் பெற்றான்;

௭. சலோமோன் ரெகோபேயாமைப் பெற்றான்; ரெகோபேயாம் அபீயாவைப் பெற்றான்; அபீயா ஆசாவைப் பெற்றான்;